ஜெம்ஸ் சத்தம்

Since 1972

மே 2021

பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

மத்தேயு 7:25

ஜெம்ஸ் மருத்துவமனை

துதி

உத்திரப்பிரதேசம் மாநிலத்தின் சோன்பத்ரா கோட்டத்திற்குட்பட்ட துதி பணித்தளத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஜெம்ஸ் மருத்துவமனை ஜெபத்துடன் திறக்கப்பட்டது. ஜெம்ஸ் ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் பணித்தள மக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினர். சகோ. ஜெயசிங் டேவிட் மற்றும் ஜெம்ஸ் நிர்வாக இயக்குநர் Dr. ராஜேஷ் டத்தி ஆகியோர் ஜெபத்துடன் மருத்துவமனையினைத் திறந்துவைத்தனர். பணித்தள மக்களுக்கும் மற்றும் கோண்ட் ஆதிவாசி மக்களுக்கும் இம்மருத்துவமனை மிகுந்த பயனுள்ளதாயிருக்க ஜெபிக்கிறோம்.

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல் - 4
சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

ஜெம்ஸ் மருத்துவமனை - துதி - 2

கணக்கில் இருக்கும் கண்ணீர் - 13

பணித்தள ஜெபக் குறிப்புகள் - 18

முன்னேற்றப் பணி முகவரிகள் - 30

கன்வென்ஷன் கூட்டங்கள் - நேபாள் - 31

Published by

GEMS Educational and Media Services
14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

Published for

Gospel Echoing Missionary Society

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான
ஜெபப் பங்காளரே,

‘உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்’ என்று நம்மை முழங்கவைக்கிறவருடைய அன்பின் நாமத்தில் வாழ்த்துகள் (சங். 18:29). நாட்கள் செல்லச் செல்ல காரியங்கள் செம்மையாக மாறாமல், கடினமாகவே மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளையே காணச்செய்கிறது. விசேஷமாக, **தேவப் பிள்ளைகள், ஊழியர்கள், சபைகள் அனைத்தும் ஆவிக்குரிய தாக்குதல்களை அதிகமாகவே சந்திக்க ஆரம்பித்துள்ளனர்.**

அந்தத் தாக்குதல்களைத் தரம் பிரிக்கக் கற்றுக்கொள்வது, வேதத்தின் வெளிச்சத்தில் இருக்குமானால், அவைகளை எதிர்கொள்வது எளிது மாத்திரமல்ல, வெற்றி பெறுவதும் எளிதாகும். உலகத்தில் எல்லா மனிதர்களும் மும்முனைத் தாக்குதலில் தாக்கப்படுகிறார்கள் என்பதனை, கன்மலையின் மேல் கட்டினவனுக்கும், மணலின் மேல் கட்டினவனுக்கும், மேலே இருந்தும், பக்கவாட்டில் இருந்தும், கீழே இருந்தும் தாக்குதல்கள் உள்ளன என்பதனை, பெருமழையும், பெருங்காற்றும், பெருவெள்ளமும் வரும்போது அறிந்துகொள்ளுகிறோம். (மத். 7:24–27)

தேவ வார்த்தையின்படி, நாம் ஆவி, ஆத்துமா, சரீரமாகிய திரியேக பாத்திரங்கள் (1 தெச. 5:23). **எனவே, தாக்குதல்கள் இந்த மூன்றின் மேலும் உண்டாகிறது என்பது உண்மை. எனவேதான், வரும் தாக்குதல்களைத் தரம் பிரித்துப் பார்க்கக் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம் என்றேன்.**

எனவே, வாழ்க்கையில் எதிர்நோக்கும் தாக்குதல்கள் சிலவற்றை அடையாளம் காட்டிக்கொடுக்க உதவும்படியே இந்த மடலை எழுதுகிறேன்.

வாழ்க்கையில் நடக்கும் விரும்பத்தகாத காரியங்கள் நிமித்தமும், தன் பிரிய மகன் யோசேப்பினை இழந்ததின் நிமித்தமும், உற்சாகம் குறைந்து, கவலைகள் கவ்விப் பிடிக்க (ஆதி. 34:30; 37:34,35; 42:38). அதிலேயே மூழ்கி, ஆவியில் மிகவும் தாக்கப்பட்டிருந்த யாக்கோபை மீண்டும் உயிர்ப்பித்தது, யோசேப்பு அனுப்பின வண்டிகளும், எகிப்துக்கு அதிபதியாக இருக்கிறான் என்ற செய்தியுமே. (ஆதி. 45:27)

சம்பவங்கள் அனைத்தும் அவனுடைய ஆவியையே பலவீனப்படுத்தியிருந்தன. அவைகள் மற்ற பிள்ளைகளின் ஆறுதல் வார்த்தைகளினால் சரிசெய்யப்படமுடியவில்லை (ஆதி. 37:35). ஏனென்றால், மனித வார்த்தைகள் ஆத்துமாவினையே (அல்லது மனதினையே) தொட வல்லவைகளாய் இருந்ததே ஒழிய, ஆவியை உயிர்ப்பிக்கப் போதுமானதாக இல்லை. அப்படியே, இயேசு உயிரோடிருக்கிறார் என்பதும், அவர் அருளும் வரங்களும் நம்மை உயிர்ப்பிக்கப் போதுமானவை.

ஆவியில் வேதனை உண்டானால், அது ஆத்துமாவில் கசப்பினை உண்டாக்கிவிடும் (யோபு 7:11). அது சரீரமாகிய வாயைக் கிண்டிவிட்டுவிடும். அதனால்தான், ஆவியிலே உண்டாகும் தாக்கம் மிகவும் கொடியது. ஆவியின் கபடமற்ற தன்மையைக் காத்துக்கொள்வதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியம் (சங். 32:2). மோசேயின் ஆவியை ஜனங்களின் செய்கைகள் விசனப்படுத்தினதினால், அவன் பதறிப் பேசினான் (சங். 106:33). அவருடைய நல்ல ஆவி நம்மை செம்மையான வழியில் நடத்த பூரணமாய் ஆவியானவருக்கு விட்டுக்கொடுக்கக் கற்றுக்கொண்டவர்கள், இந்தவிதத் தாக்குதலில் வெற்றிபெற்று நிற்பது எளிது. (சங். 143:10)

‘நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்’ என்பதே அவர் தரும் வாக்கு (ஏசா. 57:15). ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் ஆடையே. (ஏசா. 61:3)

சொப்பனங்களும் அநேக வேளைகளில் ஆவியைத் தாக்க வாய்ப்புண்டு (தானி. 2:1,2). ஆவியானவரின் நிறைவோடு வாழ்வதே இதற்கு மாமருந்து. பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி விழித்திருப்போம். (எபே. 6:18)

ஆத்துமா அல்லது மனம் நம்முடைய வாழ்வில் காணப்படும் போர்க்களம் (Battle field) என்றால் மிகையாகாது. அங்கேதானே ஆவியும் மாம்சமும் தங்களுடைய போரை நடத்துகின்றன (கலா. 5:17). இந்த **மனப் போராட்டம், நம்முடைய வாழ்வின் முன்னேற்றத்தைத் தடைசெய்யப் போதுமான வலிமையுள்ளது**. அர்த்தமற்ற அநேக மனப்போராட்டங்கள், ஏன் ஏற்படுகிறது என்றுகூடத் தெரியாமலிருக்கும். அமலேக்கு இஸ்ரவேலை பின்னாலே, பலவீனரைத் தாக்கியதற்குக் காரணங்கள் உண்டோ? (யாத். 17:8). தேவ ஜனங்கள் தாங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போகக்கூடாதிருக்க வரும் சத்துருவின் சூழ்ச்சி அது. **கூட்டு ஜெபமும், இசைந்த ஆவியுமே அதனை மேற்கொள்ள வல்லது** என்பது இந்த சம்பவத்தில் தெளிவு.

தேவப் பணியைத் தடைசெய்ய மனப்போராட்டம் போதுமானது. இதனை நெகேமியாவின் புத்தகத்தில் நாம் தெளிவாக வாசிக்கவில்லையா? (நெகே. 4:5)–ல் ‘கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசினார்களே’ என்றே நெகேமியா குறிப்பிடுகிறான். **எதிரியின் எரிச்சல், கோபம், தேவ மக்களை சக்கந்தமாக, கேலியாகப் பேச ஏவிற்று. அந்த கேலிக்குக் காரணம், தேவப் பணியையோ, தேவமக்களையோ ஒரு பொருட்டாக எண்ணாத வண்ணம் அற்பமாகப் பார்க்கத் தள்ளிற்று**. அவர்களுடைய வேலையை கீழாகவே கணிக்கத் தூண்டிற்று. (நெகே. 4:1–3)

தேவ மக்கள் தங்களைக் குறித்து கேவலமாக எண்ணவேண்டும் என்ற வார்த்தைகளை சத்துரு அள்ளி விதைக்கிறதினால், மனதிலே சந்தேகம்

என்ற தொனி தொனிக்க, அது மனப்போராட்டமாக உருவாகிறது. நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாம் கூடும் என்று (பிலி. 4:13) சூளுரைக்கக் கற்றுக்கொண்டோரே இதில் வெற்றிபெறுகிறார்கள். உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா! என்ற தைரிய வார்த்தைகளை தேவன் சொல்லுவதோடு, உனக்கிருக்கும் இந்த பெலன் போதும் என்பதனையும் உணர்த்துகிறாரே (நியா. 6:14). அந்த உணர்வு மன பெலத்தினைக் கூட்டித் தரப் போதுமானது அல்லவா!

தங்கள் முன் நின்ற திரள் கூட்டத்திற்கு ஆகாரம் தருவது எப்படி என்று மனதிலே போராடிக்கொண்டிருந்த சீஷர்களைப் பார்த்து இயேசு, உங்களிடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்டு, அதனையே உபயோகித்தது நமக்குத் தெரிந்ததே! (யோவான் 6:1–13)

கர்த்தரையும், அவருடைய வாக்குகளையும் சார்ந்திருப்பதே இந்த போராட்டத்தில் வெற்றிபெற வழிவகுக்கும். வேலை மிகவும் பெரிது, எங்கள் பெலன் குறுகியது என்று புலம்பாமல், **"கூடுமே! உம்மாலே எல்லாம் கூடும்"** என்ற வார்த்தைகள் வாயில் தவழ, தடைகள் உடைத்தெறியப்படுமே!

அடுத்து, மனப்போராட்டம் ஒரு மனதினைப் பாதிக்கும் காரியங்களால் உண்டாகின்றது. இரண்டு பேர் ஒருமித்திருந்தால் அல்லவோ இணைந்து செயலாற்றமுடியும் (ஆமோஸ் 3:3). **தேவனுடைய ஆலயத்தின் வேலையைச் செய்யும்படிக்கு நடத்தும் தலைவர்கள் ஒருமனப்பட்டு நிற்கவேண்டுமே**. (எஸ்றா 3:9)

ஆதித் திருச்சபையின் முன்னேற்றத்திற்கு, ஒருமனப்பாடு ஒரு பெரிய காரியமாகக் காண்பிக்கப்படுகிறதே. ஆயத்த ஜெபத்தில் ஒருமனம் (அப். 1:14), பெந்தேகோஸ்தே நாளில் ஒருமனம் (அப். 2:1), ஆராதனையில் ஒருமனம் (அப். 2:46), அப்பம் பிட்குதலில் ஒருமனம் (அப். 2:46), எதிர்ப்புகள் வந்தபோது ஒருமனம் (அப். 4:24), கூடி உறவுகொண்டபோது ஒருமனம் (அப். 5:12), பிரசங்கத்தினைக் கேட்பதில் ஒருமனம் (அப். 8:6), பிரச்சனைகளைத் தீர்க்க கூடிவந்தபோது ஒருமனம் (அப். 15:26), தேவனை மகிமைப்படுத்துவதில் ஒருமனம் (ரோமர் 15:5), வாழ்வில் ஒருமனம் (1 பேதுரு. 3:8).

சந்தேகத்தினை உருவாக்கி, அதையே பரப்பி மற்றவர்களின் மனதில் நலமானதை விதைக்காமல், தீயவைகளை விதைக்க முற்பட்டு செயல்படுவோரின் செய்கையில் நல்லவர்களும்கூட மனப்போராட்டத்தில் மாட்டிக்கொண்டு செய்வதறியாது மாறிவிட்ட கொடுமையை எப்படி விவரிப்பது? கர்த்தருடைய கரமே அதனைச் செய்யவேண்டும் (2 நாளா. 30:12). தேவ மக்கள் ஒருமனப்பட்டு ஆராதனை செய்ய அவர்கள் பாஷையைச் சுத்தம்பண்ணுவேன் என்பது அவர் தரும் வாக்கு அல்லவா. (செப். 3:9)

மனப்போராட்டத்தில் மற்றொரு காரியம், **"ஐயோ! என்னுடைய உழைப்பும், தியாகமும், வீணும் வியர்த்தமுமாகிவிடுமோ?"** என்ற அச்சத்தினால் உண்டாவது (ஏசா. 49:4). மரியாள் பரிமளத் தைலத்தினை இயேசுவின் பாதங்களில் ஊற்றினபோது, இது வீண் என்றவர்களின் வார்த்தைகளை இயேசு உடனே கடிந்துகொண்டார் அல்லவா! (மாற். 14:1–9). இயேசுவின் சீஷர்கள் அதனைச் சொன்னபோது, அவர்கள் சொல்வது சரிதானோ? முன் பின் யோசிக்காமல் இதனை நான் வீணடித்துவிட்டேனோ? போன்ற கேள்விகள் மரியாளின் உள்ளத்தில் தோன்றியிருக்கும். இயேசுவோ, இந்த மனப்போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு, அந்த செய்கைக்கு அங்கீகாரமாக மகுடத்தினையும் சூட்டிவிட்டு, 'இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்' என்றாரே. (மாற். 14:9)

தேவ மக்களின் தியாகங்களைத் தப்புக்கணக்கு போடுவோர்க்கு அவர் தந்த பதிலடி அல்லவா? ஏசாயா புலம்பினான் (ஏசா. 49:4); ஆனாலும் தேவனிடத்தில் தன் பலன் (reward) இருக்கிறது என்று தன்னைத் தேற்றிக்கொண்டான். எரேமியா புலம்புகிறான் (எரே. 20:7–11); ஆனாலும், கர்த்தர் என்னோடு கூட இருக்கிறார் என்ற நினைவு அவனைத் தைரியப்படுத்துகிறது.

ஆசாப் என்னும் சங்கீதக்காரன் புலம்புகிறான்; வீணாகப் பரிசுத்தமாய் வாழ்ந்துவிட்டேனோ என்று (சங். 73:13); எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம் (சங். 73:28) என்றே முடிக்கிறான்.

யோபுவின் பக்தி வாழ்வை சீண்டல் செய்த சத்துருவாகிய சாத்தான், அதற்குப் பின் ஒரு இரகசியம் மறைந்திருக்கும் இருப்பதுபோல்

வர்ணம் தீட்டுகிறான் (யோபு 1:9). ஆனால், அது உண்மையில்லை என்பதனை யோபுவின் துதி வார்த்தைகள் கோடிட்டுக் காட்டுகின்றன (யோபு 1:21). எனவேதான், பவுல் கொரிந்து சபையைப் பார்த்து, **"கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று** அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக' (1கொரி. 15:58) என்கிறார்.

மனப்போராட்டத்தின் மற்றொரு அங்கத்தில் காணப்படும் காரியம், **"அவதூறு" அல்லது வீண்பழி!** சங்கீதக்காரன் தாவீது, 'அநேகர் சொல்லும் அவதூறைக்கேட்டேன்; எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது' (சங். 31:13) என்றே கூறுகின்றான். அவதூறு பேசுகிறவனை 'துன்மார்க்கன்' என்றே வேதம் வர்ணிக்கிறது (சங்.50:16,20). வீணாய் பழி சுமத்தப்படும்போது, ஒருவித திகில் தேவ பிள்ளைகளை ஆட்கொள்ளுகிறது.

இயேசுவும் கெத்செமனேயில் திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார் அல்லவா (மாற். 14:33). **அவரைக் குறித்துச் சொல்லப்பட்ட, சொல்லப்படப்போகிற வீண்பழிகள், சுமத்தப்படப்போகிற அவதூறுகள், பாவிகளால் செய்யப்படும் விபரீதங்கள் (எபி. 12:3), அவரை திகிலடையச் செய்தது** ஆச்சரியமல்லவே! நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்த அவருக்கு (அப். 10:38) விரோதமாக **"பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் பிடிவாதமாய் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள்"** (லூக். 23:10). திகில் கண்ணீரை வரவழைத்து, பலத்த சத்தத்தோடே அவரை விண்ணப்பம் செய்யவைத்தது. (எபி. 5:7)

அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது (அப். 8:33). **அமைதியாய் இருந்தால் நியாயம் கிடைக்காது. எனவே, பதில் சொல்லுவோம் என்றால் திரித்துக் கூறப்படும் என்ற நிலையில் மனப்போராட்டம் அதிகமாகிறது.**

நொண்டியான மேவிபோசேத்தின்மேல் வேலைக்காரன் சீபா வீண்பழி சொல்லி, சொல்லாத வார்த்தைகளையும் சொன்னதாக தன் சுய ஆதாயத்தினைத் தேடிக்கொள்ளவில்லையா (2 சாமு. 19:27). அப்படிப்பட்ட நேரங்களில்,

தாவீது - 'நானோ, கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன்' என்றான். (சங். 31:14)

இயேசு - 'என் சித்தமல்ல, உம் சித்தம் என்றார்.' (லூக். 22:42)

மேவிபோசேத் - 'ராஜா, தமக்கு நலமானபடி செய்யும்' என்றான். (2 சாமு. 19:27)

'பலர் தீமை நிந்தை மொழிகள் உன்மேல்
பொய்யாய்ச் சொன்னாலும் களிகூருவாய்
இதுவே உன் பாக்கியம் என இயேசு சொன்னார்
இந்த மெய் வாக்கு நிறைவேறுதே...' – சாராள் நௌரோஜி

தொடர்ச்சியான துன்ப அலைகள் உண்டாகும்போதும், மனப்போராட்டம் அதிகமாகிறது (சங். 40:12). அவைகள் என் தலை மயிரிலும் அதிகமாயிருக்கிறது. என் இருதயம் சோர்ந்துபோகிறது என்றே கதறுகிறான் தாவீது. 'எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால் நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்' (சங். 55:6) என்று வேண்டுதல் செய்கிறான். 'பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பது தமிழ் பழமொழி, 'Misfortunes never come single' என்பது ஆங்கில பழமொழி. 'நிற்க நிலையில்லை' என்பது சங்கீதக்காரனின் புலம்பல் (சங். 69:2). **சில துன்பங்கள் காரணமற்றவை. சத்துருவின் தாக்குதல்களில் அவை ஒருவிதம். தேவையற்ற பகைகள், ஏமாற்றங்கள், பரிசுத்தத்தினைக் கெடுக்கும் சூழ்நிலைகள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். அர்த்தமற்ற பணச்செலவுகள், பொருளாதார நெருக்கங்களினால்** அநேக தேவ மனிதர்களையும் முடக்கிவிட வாய்ப்பு உண்டு.

கர்த்தனே எனம் துணையானீர்
நித்தமும் என் நிழலானீர்

எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கலமாயினீர்
இராஜா உம் அன்பு என்னைக் கண்டது
உம்மைப் போல் ஐயா எங்கும் கண்டதில்லை
– எமில் அண்ணன்

என்ற பாடல் வரிகள் இப்படிப்பட்ட நேரங்களில் நம்மை தூக்கி நிறுத்த வல்லமையுள்ளவை. எனவே, **சிந்தைதனை கிறிஸ்துவுக்குள் காத்துக்கொள்ள,** எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்மில் கிரியை செய்ய, சமாதானத்தின் தேவனுக்கு இடம் கொடுப்பதே சிறந்தது. (பிலி. 4:6–9)

சிந்தையில் (மனதில்) சமாதானமும், இளைப்பாறுதலும் கிடைத்தாலே சரீரத்தின் தாக்குதல்களைத் தாங்கிக்கொள்ள மிகுந்த பெலன் பெருகும். ஆயினும், சில வேளைகளில், இனம் தெரியாத வேதனைகள் சரீரத்தினை தாக்குவதாகத் தோன்றலாம். மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்ட நமக்கு, அழிந்துபோகிற சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், அது பெலவீனப்பட வாய்ப்புகள் உண்டு. தேவ பாதுகாப்பும், தெய்வீக சுகமும் நமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பதால் அதை அனுபவிக்க விசுவாசம் நம்மில் பெருகவேண்டுமே.

வேதத்தினை அறிந்திருந்தும், இயேசுவைக் குறித்தே பேசிக்கொண்டு நடந்துகொண்டிருந்தும், உயிர்த்தெழுந்தார் என்ற செய்தி தெரிந்திருந்தும், அவருடைய அற்புதங்களைக் கண்ணாரப் பார்த்திருந்தும், வேத வாக்கியங்களை விசுவாசிக்கக் கூடாமல், இயேசு கூட நடந்துகொண்டு வருவதனை அறியக்கூடாமல், மந்த இருதயம் உள்ளவர்களாய், துக்க முகத்தோடு எம்மாவூருக்கு போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷர்களைப் போல நாமும் இருக்க வாய்ப்பு உண்டு. (லூக். 24:13–35)

நம்மோடு இருப்பவரைக் காணும் கண்கள் நமக்கு உண்டாவதாக. உறுதி நம்மை உற்சாகப்படுத்துவதாக.

அவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியே ஆதித் திருச்சபைக்கு தைரியத்தினைக் கூட்டி வழங்கிற்று (அப். 4:31,33). பாடுகளைச் சகிக்க பெலன்கொடுத்தது, இரத்தசாட்சிகளாய் மரிக்கவும், கல்லெறியப்படவும், எரிக்கப்படவும், பாடலோடு அதனை சந்திக்க துணிவுள்ளவர்களாகவும் மாற்றிற்று. **இந்த நாட்களிலும், வரும் நாட்களிலும் இந்தியத் திருச்சபைக்கு இது அதிகம் தேவைப்படுகிறது.** விசேஷமாய் முன்னணி வீரர்களுக்கு அதிகமதிகமாய் தேவைப்படுகிறது. ஜெபிப்போம், ஜெயம்கொள்ளுவோம், சோர்வின்றி உழைத்திடுவோம்.

தாக்குதல்களைத் தரம் பிரித்துப் பார்ப்போம்
தாங்கொண்ணா தாக்குதல்களையும் தகர்ப்போம்
தன்னையே தந்தவர் கூட உண்டே
தரணியில் வெற்றி பெற பெலன் உண்டே

ஆவியில் அமைதியில்லா தாக்குதலைச் சந்திப்போம்
ஆதாமின் மைந்தர்களுக்கு ஆவியானவரின் பெலன் நிரப்பிடும்
ஆவியானவரின் பெலத்தால் அலகை மேற்கொண்டே
ஆண்டாண்டு காலம் முன்னேறுவோம் ஜெயம்கொண்டே

மனப்போராட்டம் பல கோணங்களில் வந்திடும்
மனதைக் காக்க சமாதான தேவனால் பெலன் பெற்றிடும்
மந்த இதயமாகினும் மகிபன் அருகில் உண்டே
மறக்காமல் நினைப்பார் அவரின் துணை உண்டே

ஏமாற்றம், தோல்விகள், பயங்கள் சூழ்ந்திடும்
ஏக்கங்கள் உழைப்பினை வியர்த்தமாக்கிடும்
ஏசு உயிர்த்தார் என்றே கூறுவோம் வீறு கொண்டே
ஏகிடுவோம் பரமசேனை எதிர்கொண்டே

அன்பரின் அருவடைப் பணியில்
அன்பு சகோதரர் D. அகஸ்டின் ஜெபக்குமார்

செய்தி

கணக்கில் இருக்கும் கண்ணீர்



சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

தேவன் நல்லவர்; அனுதினமும் நமக்கு நன்மை செய்கிறவர். எவ்வளவாக அவரை நாம் அறிந்துகொள்கின்றோமோ, அவ்வளவாக கனியுள்ள வாழ்க்கையும், அவரை பணிந்து ஆராதித்தலும், அவருடைய மனதையும் சித்தத்தையும் புரிந்து செயல்படுதலும் நம்மிடத்திலே காணப்படும். அவரை அறிய அறிய முன்னே இருக்கின்ற வழிகள் நமக்கு தெளிவாகத் தென்படும். கலக்கமும் மற்றும் குழப்பமுமான சூழ்நிலைகளிலும்கூட வழிகளை தெளிவாக அறிந்து நம்மால் பயணிக்க முடியும். எனவே அவரை நன்கு அறிந்திருந்த சங்கீதக்காரன்,

“என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?” (சங். 56:8) என்று கூறுகின்றான்.

தேவனைப் பற்றிய புரிதலோடும், அறிதலோடும் சங்கீதக்காரன் தனது ஜெபத்தினை இப்பகுதியில்

வெளிப்படுத்துகின்றதை நம்மால் காண முடியும். தேவனைக் குறித்த அறிவிலே மேலும் ஒருபடி முன்னேறியிருப்பதையும் அவனது வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றனவே. **"என் அலைச்சல்களும், என் கண்ணீரும் உம்முடைய கணக்கிலும், துருத்தியிலும் இருக்கிறது"** என்பதுதானே அவரைக் குறித்து அவனுக்கு இருந்த நம்பிக்கை. முன்நாட்களில், யாராவது மரித்துவிட்டால், அழுகிறவர்கள் தங்கள் கண்ணீரை குப்பிகளில் சேகரித்து, அவைகளை அடக்கம்பண்ணுகின்ற இடத்தில் போட்டுவிடுவது வழக்கம். இறந்தவர்கள் மீதான தங்கள் அன்பினை வெளிப்படுத்த இவ்வாறு செய்துவந்தனர். ஆனால், சங்கீதக்காரனோ, என்னுடைய கண்ணீரை உம்முடைய துருத்தியிலே வையும் என்று சொல்லுகின்றான். நம்முடைய கண்ணீரை அவர் மறக்காத தேவன் என்பதையே சங்கீதக்காரன் வெளிப்படுத்துகின்றான். **நம்முடைய தேவன் எல்லாவற்றிற்கும் கணக்கு வைக்கிற தேவன், நம்முடைய கிரியைகளையும் மற்றும் செய்கைகளையும் ஒருபோதும் அவர் மறந்துபோகிறவரல்ல.**

நாம் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் காரியங்களையும் கர்த்தர் உற்றுக் கேட்கிறவர்; நினைவுகூரும்படியாக அவைகளை ஞாபக புஸ்தகத்தில் எழுதிவைக்கிறவர். "அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது." (மல் *3:16*)

அநேக நேரங்களில், இரண்டு பேர் பேசிக்கொண்டிருக்கும்போது, தேவனும் அதனை உற்றுக்கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பதையும், தனது ஞாபகப் புஸ்தகத்தில் எழுதிக்கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் முற்றிலும் மறந்துவிடுகின்றோம். தேவனது இந்த செயலை, எதிர்மறையான எண்ணத்தோடு பார்த்தால் ஒருவேளை நமக்குள் பயம் உண்டாகத்தொடங்கும்; ஆனால், நேர்மறையான எண்ணத்தோடு பார்த்தால் நமக்குள் உற்சாகம் உண்டாகிவிடும். அவருடைய சித்தத்தைச் சார்ந்திருக்கும் நம்முடைய சிந்தனைகளை, அவருக்காக நாம் செய்யும்

கிரியைகளை, தேவனுடைய ராஜ்யத்திற்காக நாம் செய்யும் காரியங்களை மற்றும் அழிந்துபோகும் ஆத்துமாக்களைக் குறித்து நாம் படும் கவலைகளை அவர் பதிந்துவைக்கிறவர் என்ற எண்ணம் நமக்குள் உற்சாகத்தைக் கொண்டுவரும்.

அதுமாத்திரமல்ல, **நமக்கு பலனளிக்கும்படியாக நம்முடைய கிரியைகளையும் தனது புஸ்தகத்திலே பதிவுசெய்துவைக்கிறவர்.** மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் (வெளி. *20:12*) என்று வாசிக்கின்றோமே. நம்முடைய காரியங்களை இத்தனையாய் தேவன் ஞாபகத்தில் வைக்கிறார் என்பதனை எண்ணுகின்ற வேளையில், நமக்குள் உற்சாகம் உண்டாவது நிச்சயம். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் தேவன் ஞாபகத்தில் வைக்கிறவர். எனினும், "**என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்**" (ஏசா *38:17*) என்று கூறுகின்றான் ஏசாயா. நம்முடைய தவறுதல்களை நினைத்து மனம் வருந்தி, துக்கித்து, மன்னிப்பு வேண்டி, மனம் திரும்பும்போது, தேவன் அவைகளை மன்னித்து, தனது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிடுகின்றார். நாம் மனந்திரும்பாதிருந்தால் மாத்திரமே, அது பாவமாக நம்முடைய கணக்கில் காணப்பட்டுக்கொண்டிருக்கும். ஆனால், நாம் மனந்திரும்பிவிடுகின்றபோதோ, அவைகளை விட்டு விலகி நம்மை சரிசெய்துகொள்ளுகின்றபோதோ, அவர் பாவங்களை மறந்துவிடுகின்றவர்.

எனது கண்ணீரையும் உமது கணக்கிலே வையும் என்று சங்கீதக்காரன் சொல்வதுபோலவே. "ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு, அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும்" (யோபு *19:23,24*) என்று யோபுவும் சொல்லுகின்றான்.

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத். 10:42) இயேசு கிறிஸ்து. "இந்தச் சிறியரில் ஒருவன்" என்று இயேசு குறிப்பிடும் மனிதன், வயதிலோ, நிலையிலோ, மனிதர்களால் ஒரு பொருட்டாகவும் எண்ணப்படத் தகுதியற்றவனாயிருக்கும் ஓர் சாதாரணமான மனிதன்; ஜனங்கள் மத்தியில் கனம் பெற்றவனாக இல்லை; என்றாலும், இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற சீஷன் அவன். இயேசு கிறிஸ்துவுக்குப் பின்னாகச் செல்லுகின்ற, சீஷனாகத் தன்னை அர்ப்பணித்திருக்கின்ற, சிறியவர்களில் சிறியவர்களையும் தேவன் ஒருபோதும் அற்பமாக எண்ணுவதில்லை. இப்படிப்பட்ட மனிதர்களுக்கு "ஒரு கலசம் தண்ணீர்" கொடுக்கிறவனையும் நினைவுகூருகின்றவர் நமது தேவன். அவருடைய சீஷர்களாக நாம் காணப்படுவதினாலே, நம்மேல் அவருக்கு இருக்கின்ற கரிசனையினையும், கவனிப்பும், நம்முடைய வாழ்க்கையில் நடக்கும் சின்னச் சின்னக் காரியங்களையும் ஞாபகமாக அவர் எழுதிவைப்பதும், நமக்கு நன்மை செய்தவர்களையும் ஞாபகத்தில் வைத்து, அவர்களுக்கு அவர் செய்யும் உபகாரங்களும் எத்தனை உன்னதமானது. நாம் சிறியவர்களாயிருந்தாலும், அவரைப் பின்பற்றுகிறவர்களானபடியினால், மற்றவர்களது ஆசீர்வாதத்திற்குக் காரணர்களாக மாறிவிடுகின்றோம். ஒரே ஒரு முறை, ஒரே ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக்கொடுத்தாலும், அதையும் தனது கணக்கில் எழுதிவைக்கிறவர் நம்முடைய தேவன். நமக்கு நன்மை உண்டாகும்படி, அநேக காரியங்களை அவர் தன்னுடைய ஞாபகப் புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார். இதனை நினைக்கும்போது, பயமல்ல, ஆனந்தமே நமக்குள் பொங்கியெழுகிறது.

மொர்தெகாயின் வாழ்க்கையிலும் இந்த காரியம் நடைபெற்றதே. அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறபோது, வாசல்காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும் தேரேசும் வர்மம் வைத்து, ராஜாவாகிய அகாஸ்வேருவின்மேல் கைபோட வகைதேடினார்கள். இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரியவந்ததினால், அவன் அதை ராஜாத்தியாகிய

எஸ்தருக்கு அறிவித்தான்; எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள். அந்தக் காரியம் விசாரிக்கப்படுகிறபோது, அது மெய்யென்று காணப்பட்டது; ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப்போடப்பட்டார்கள்; இது ராஜ சமுகத்திலே நாளாகமப்புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது (எஸ்தர் 2:21 – 23) என்று வேதத்தில் நாம் வாசிக்கின்றோமே.

மொர்தெகாயின் இந்த செயலை ராஜாவுக்கு நினைப்பூட்ட விரும்பினார் கர்த்தர். அந்த ராத்திரியிலே ராஜாவுக்கு நித்திரை வராதபடியினால், காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தைக் கொண்டுவரச்சொன்னான்; அது ராஜசமுகத்தில் வாசிக்கப்பட்டது. அப்பொழுது வாசற் காவலாளரில் ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும், ராஜாவாகிய அகாஸ்வேருவின்மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிறது வாசிக்கப்பட்டது (எஸ்தர் 6:1,2). இதனைக் கேட்டதும், மொர்தெகாய் என்ற சாதாரண மனிதனின் மூலமாகவே இன்றைக்கு நான் ஜீவனோடு இருக்கிறேன் என்பதனை ராஜா அறிந்துகொண்டான். அப்பொழுது ராஜா: இதற்காக மொர்தெகாய்க்கு கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவைச் சேவிக்கிற ஊழியக்காரர்: அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள் (எஸ்தர் 6:3). அப்பொழுது ராஜா, ராஜவஸ்திரத்தை மொர்தெகாய்க்குத் தரித்து, ராஜா ஏறுகிற குதிரையின் மேல் மொர்தெகாயை ஏற்றி, ராஜா சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியை மொர்தெகாய்க்கு சூட்டி, அலங்கரித்து, நகர வீதியில் உலாவரும்படிச் செய்து மொர்தெகாயை ஜனங்கள் மத்தியில் கனப்படுத்தினானே. இது கர்த்தரால் உண்டானது அல்லவா. உலகத்தில் காணப்படுகின்ற ராஜா ஒரு மனிதனுக்கு இத்தகைய கனத்தைக் கொடுக்கக்கூடுமென்றால், ராஜாதி ராஜாவாகிய தேவன், நம்மை நினைவுகூரும்போது, நம்மைக்குறித்த காரியங்களை அவரது ஞாபகப் புஸ்தகத்தில் வாசிக்கும்போது, நமக்காக நிச்சயம் பெரிய காரியங்களைச் செய்வார்.

பணித்தள ஜெபக் குறிப்புகள்

PEACE 2 கோட்டம்

மே 01 — மஞ்சி

ரிவல்கஞ்ச் பணித்தளத்தில் மூன்று நாட்கள் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. மேலும், கௌரி, தர்ம்பூரா, ஜயித்பூரா, பஹோரான்சிங்கின் டோலா ஆகிய கிராமங்களில் *100* பேருக்கு கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் மூலமாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பத்தேஹ்பூர் கிராமத்தில் அசுத்த ஆவியின் தாக்குதலினால் பேச்சு நின்று போன சகோதரர் சரவண்குமாருக்கு, சபையார் கூடி ஜெபித்ததின் நிமித்தம் அற்புத சுகம் கிடைத்தது; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! இப்பணித்தளத்தில் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாயிருக்கும் *8* பேருக்காகவும், பணித்தள ஊழியரின் மகளுக்கு இருக்கும் சளி மற்றும் இருமல் குணமாகும்படியாகவும், இப்பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 02 — ஷாஹப்கஞ்ச்

ஷ்யாமசக் கிராமத்தில் திலீப் கஷ்யப்பின் வீட்டில் மாதாந்திர ஜெபம் நடத்தப்பட்டதில் *20* பேர் கலந்துகொண்டு கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். போதை வஸ்துக்கு அடிமையாக இருந்த தேவரியாவைச் சேர்ந்த ட்ரக் ஓட்டுகிறவரான த்ரிபவன் குமாருக்கு கர்த்தர் விடுதலை கொடுத்தார்; கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மனநிலை பாதிப்புக்குள்ளாகியிருக்கும் காஜல்குமாரி, நிஷாகுமாரி, குஷ்புகுமாரி,

மற்றும் ரேணுகாகுமாரி ஆகியோருக்கு கர்த்தர் பரிபூரண விடுதலை கொடுக்கும்படியாகவும், இப்பணித்தளத்தின் ஊழியருடைய சகோதரி பூஜாகுமாரி, கணவர் நிட்டுகுமார் மற்றும் அவருடைய 2 பிள்ளைகளும் ஒரு மனதாக சேர்ந்து வாழ கர்த்தர் கிருபை செய்யயும்படியாகவும் ஜெபியுங்கள்.

மே 03 சந்துவா

10 புதிய விசுவாசிகள் சபை ஆராதனையில் கலந்துகொள்ளுகின்றனர். சகோ. ஹரே கிருஷ்ணா ராம் மற்றும் அவருடைய முழு குடும்பமும் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். வியாதிக்குள்ளாயிருந்த மனோஜ் கேஷரியின் தந்தை சபையாரின் ஊக்கமான ஜெபத்தினால் சுகமடைந்தார்; கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக! ஆராவின் சகோதரி புஷ்பாதேவி மற்றும் அனிதாதேவி ஆகியோர் ஞானஸ்நானம் பெறவும், அநாதை இல்லத்தில் பயிலும் 5 பிள்ளைகள் கர்த்தரை அறிகிற அறிவிலும், கல்வியிலும் மற்றும் ஆவிக்குரிய வாழ்விலும் வளர்ந்து பெருகவும், மேலும், இப்பணித்தள ஊழியரின் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 04 ஜகதீஷ்பூர்

இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில், கிட்டத்தட்ட 400 பேருக்கு கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கிராமங்களில் நடத்தப்பட்ட சுவிசேஷக் கூடுகைகளில் 200 பேர் கலந்துகொண்டு நற்செய்தியைக் கேட்டனர்; கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, திருமுழுக்கு பெற ஆயத்தமாயிருக்கும் 10 பேருக்காகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளது கல்வி மற்றும் திருமணம் ஆகியவற்றிற்காகவும் ஜெபியுங்கள்.

மே 05 நாராயண்பூர்

தாராசக் பணித்தளத்தில் நடைபெற்ற ஊழியத்தில் 4 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கைரா பணித்தளத்தில் 3 பேருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு கர்த்தர் கிருபை பாராட்டினார்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! குடித்துவிட்டு மனைவியைக் கொடுமைப்படுத்தும்

அர்ச்சனாதேவியின் கணவனை தேவன் சந்திக்கும்படியாகவும், பீரோ கிராமத்தினைச் சேர்ந்த நாராயணனுக்கு இருக்கும் இரத்த அழுத்தம் சுகமாகவும், அடிக்கடி சுகவீனமாகும் ஊழியரின் பிள்ளைகளின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மே 06 **ஷாப்பூர்பட்டி**

ஷாஹ்பூரிலிருந்து தாமோதர், தத்வா, ஹிராலா யாதவி, ராஜ்குமார் தத்வா மற்றும் சஞ்சித்தேவி ஆகியோர் புதிதாக சபைக்கு வருகிறார்கள். பிரைன் டி.பி — யினால் பாதிக்கப்பட்டு, மரிக்கும் தருவாயிலிருந்த ஊழியரின் மகள், சபையாரின் தொடர் உபவாச ஜெபத்தினால் அற்புத சுகம் பெற்றாள்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! இப்பணித்தளத்தில் உள்ள விசுவாசிகள் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப் போகாமல் கர்த்தரில் ஸ்திரமாக இருக்கவும், ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாயிருக்கும் 6 பேருக்காகவும், மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் மகிமா முழுவதுமாக குணமாகவும் ஜெபியுங்கள்.

மே 07 **சரையா**

கைப்பிரதிகள் மற்றும் நற்செய்திப்பணியின் வாயிலாக 6 கிராமங்கள் சந்திக்கப்பட்டன; சுமார் 3000 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஜக்பலியா கிராமத்தைச் சேர்ந்த 26 வயதான திருமணமாகாத ரவி என்ற சகோதரனுக்கு, ஒரு கை சூம்பியிருந்ததோடு டி.பி. வியாதியும் இருந்ததினிமித்தம் மிகவும் பயந்துபோயிருந்தார். என்றபோதிலும், சபையாரின் ஊக்கமான தொடர் ஜெபத்தினால் அற்புத குணமடைந்து சமாதானமடைந்தார்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! சபையில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகும்படியாகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளுக்கு பள்ளியில் சேர்ப்பதற்கு இடம் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

மே 08 **கோயில்வர்**

15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சக்கியா மற்றும் சஹ்தேவ்ராய் என்ற புதிய இடங்களில் 10 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுரௌதா காலனியில் வசிக்கும் குட்டு என்ற சகோதரனுக்கு போதை

வஸ்துவிலிருந்தும், திருடும் பழக்கத்திலிருந்தும் கர்த்தர் விடுதலை கொடுத்தார்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! சபையில் சந்தானம் இல்லாத சகோதரிகளாகிய மீனுதேவி, பிரியாதேவி, சீதாதேவி, மம்தாதேவி, அன்னபூர்ண தேவி ஆகியோருக்கு கர்த்தர் சந்தானம் அருளவும், ஊழியரின் மூத்த மகனுக்கு திருமணம் ஒழுங்காகும்படியாகவும் ஜெபியுங்கள்.

மே 09 — ஹஸ்ஸன்பஜார்

இத்தாரா, ஜேட்வார், தேத்ஆர், காதர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு, 185 பேருக்கு கைப்பிரதிகள் கொடுக்கப்பட்டு அத்துடன், 200 பேருக்கு சுவிசேஷமும் அறிவிக்கப்பட்டது. பாம்பு கடித்ததினால் பாதிக்கப்பட்ட 10 வயது சிறுவன், தன்னுடைய அம்மாவின் ஜெபத்தினால் அற்புதமாக உயிர் தப்பினான்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! ஹஸ்ஸன்பஜாரைச் சேர்ந்த பஞ்சாயத் கிராமம் முழுவதும் இரட்சிக்கப்படவும், ஊழியரின் காலில் 5 வருடமாக இருக்கும் புண் குணமாகவும் ஜெபியுங்கள்.

மே 10 — சந்தேஷ்

சபையில் 3 நாள்கள் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது; 150 பேர் கலந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். தேவுவார் கிராமத்தைச் சேர்ந்த சஞ்சய் சிங்கின் மனைவியாகிய மோதிஹாரி திடீரென்று வெளியில் போய்விடுவதும், குப்பையில் போடப்பட்டிருக்கும் ரொட்டியை எடுத்துத் தின்பதுமாக இருந்ததைப் பார்த்தவர்கள், அவளுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என நினைத்தனர். இந்நிலையில், சபையாரின் 3 நாட்கள் உபவாச ஜெபத்தினால் அந்த சகோதரி அற்புதமாக குணமடைந்தார்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! 7 வருடங்களாக வாய் பேச இயலாமல் ஊமையாக இருக்கும் 16 வயதான மாதுரிகுமாரி பேசும்படியாகவும், சட்டு குமாரின் இளைய மகள் சுகமாகும்படியாகவும் ஜெபியுங்கள்.

மே 11 — சப்ரா

இப்பணித்தளத்தில் நடத்தப்பட்ட உபவாசக் கூட்டத்தில் 1000 பேர் கலந்து கொண்டு கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். ஷாஹ்பூரில் நடந்த குடும்பக் கூடுகையில் மண்டல இயக்குநர் பால்

ஆபிரகாமின் செய்தி அனைவரையும் உற்சாகப்படுத்துவதாயிருந்தது. 25 பேர் ஞானஸ்நானம் பெற்று தேவனை மகிமைப்படுத்தினர். எப்பொழுதும் வியாதியாகவேயிருக்கும் சகோ. துல்சி பண்டித் குடும்பம் முழுவதும் குணமாகி கர்த்தருக்குள் வரவும், இப்பணித்தள ஊழியரின் சின்ன மகனுக்கு தேர்வு நேரத்தில் வலிப்பு நோய் வராமலிருக்கும்படியாகவும், ஒரு வருடமாக வியாதியாகவேயிருக்கும் அவருடைய மகளுக்கு கர்த்தர் பூரண குணத்தை அருளிச் செய்யவும் ஜெபியுங்கள்.

மே 12 பிஹரியா

பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில், 70 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டதுடன், 410 பேருக்கு தனித்தாள் ஊழியமும் செய்யப்பட்டது, 3 நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபக் கூடுகையை கர்த்தர் ஆசீர்வாதமாக நடத்திக்கொடுத்தார்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! பாரஸ் யாதவின் திருமணமாகாத 7 பெண்பிள்ளைகளுக்காகவும், அவருடைய உடல்நிலையில் பூரண குணம் உண்டாகும்படியாகவும், மருத்துவம் பயிலும் அவருடைய மூத்த மகளுக்கு வெற்றி கிடைக்கவும் மற்றும் பொருளாதார நிலைமை சீர்ப்படவும் ஜெபியுங்கள்.

மே 13 மோவாப்கலா

சஹியார், அந்தாரி ஓலா, குடஹாங், அமஹருஹாங், போபத்பூர் ஆகிய கிராமங்களில் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஜனங்கள் ஆர்வமுடன் கைப்பிரதிகளை வாங்கிச் சென்றனர். மோவாப் கிராமத்தினைச் சேர்ந்த 7 பேர் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றினர்;கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! அம்ஹருஹாங் கிராமத்தின் சசிகுமாருக்காகவும், அவருடைய நுரையீரலில் இருக்கும் தண்ணீர் நீங்கி விரைவில் பூரண குணமடையும்படியாகவும், கால் முறிந்ததினிமித்தம் எப்பொழுதுமே உடல்நிலை சரியில்லாமல் இருக்கிற இப்பணித்தள ஊழியரின் அம்மாவிற்கு விரைவில் பூரண சுகம் உண்டாகும்படியாகவும், ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்கும் மற்றும் பொருளாதார நிலைமை சீர்ப்படவும் ஜெபியுங்கள்.

மே 14 — பௌனா

பௌனா பணித்தளத்தில் 65 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டதுடன், 150 பேருக்கு தனிப்பட்டவிதத்திலும் சுவிசேஷம் சொல்லப்பட்டு கிறிஸ்துவின் அன்பு அறிவிக்கப்பட்டது. மேலும், புதிதாக 7 கிராமங்களில் கைப்பிரதிகள் கொடுக்கப்பட்டு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! இப்பணித்தள சபையின் மக்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரும்படியாகவும், இப்பணித்தள ஊழியங்களுக்காகவும், பணித்தள ஊழியரின் உறவினர்கள் யாவரும் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள்!

நேபாள் கோட்டம்

மே 15 — ஜீத்பூர்

கர்மாச்சுழியில் 1 நாள் எழுப்புதல் கூட்டம் நடைபெற்றது; ஜனங்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். சகோ. டேனியல் ஜெபக்குமார் கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டார். தொடர்ந்து, இரண்டு நாட்கள் ஊழியர்களுக்கான ஜெபம் மற்றும் திட்டமிடுதல் கூட்டங்கள் நடைபெற்றன; இக்கூட்டங்களில், 20 போதகர்கள் கலந்துகொண்டனர். நேபாள் தேசத்தில் ஊழியம் செய்யும் ஊழியர்களின் குடும்பங்களுக்காகவும், அவர்கள் ஊழியத்திற்காகவும் மற்றும் அவர்கள் ஆண்டவருடைய வசனத்தில் அதிகமாய் வளரவும் ஜெபியுங்கள்.

மே 16 — ஜீத்பூர் (சரணி)

பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 5000 சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகம் செய்யப்பட்டு, நற்செய்தி அறிவிக்கப்பட்டதுடன், 5 பேருக்கு தனிநபர் ஊழியமும் செய்யப்பட்டது. சட்டாபிப்ரா பகுதியில் ஒருவர் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றினார்; கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

ஹிட்டௌடா மற்றும் மக்கரான்ச்சுழியில் தேவனது அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறவும், பணித்தளங்களில் தேவ சித்தம் பரிபூரணமாக நிறைவேறவும், ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

மே 17 ஜப்ரஹா

பச்ருக்கி, பகுவர்வா ஆகிய கிராமங்களில் படக்காட்சி ஊழியம் செய்யப்பட்டு, 100 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. புதிதாக பிள்ளைகளுக்கான நலத்திட்ட கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்பட்டது; கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக! ஜப்ரஹா பகுதி மக்களிடத்தில் காணப்படுகின்ற குடிப்பழக்கம் மற்றும் புகைபிடித்தல் ஆகியவை மாறவும், ஊழியரின் பிள்ளைகளுக்காகவும், அவர்கள் அனைவரின் ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 18 ஹர்தா

மக்கரான்ச்சுழி மற்றும் தாரான்ச்சுழி ஆகிய கிராமங்களில் கைப்பிரதிகள் மற்றும் சுவிசேஷப் புத்தகங்கள் வாயிலாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதுடன், 24 பேருக்கு தனித்தாள் ஊழியமும் செய்யப்பட்டது. இந்த பணித்தளத்தின் ஊழியம் மேலும் வளரவும், சுவிசேஷப் பணிக்கு உண்டாகும் தடைகள் மாறவும், ஆலய ஆராதனையில் பங்குபெறும் விசுவாசிகளுக்காகவும், ஹிட்டௌடா நகரில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகவும் மற்றும் இப்பணித்தள ஊழியரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

Peace 1 கோட்டம்

மே 19 சத்ரா

பட்காகாவ், மன்டேர், டண்டவா ஆகிய பணித்தளங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கேர்வா, மேக்லுசிகஞ்ச், ஜுரியா ஆகிய இடங்களில் நடைபெற்ற ஞானஸ்நான ஆராதனையில் 8 பேர் திருமுழுக்குப் பெற்றனர்;கர்த்தரைத் துதியுங்கள்! சத்ராவில் ஆலயக்

கட்டுமானப் பணி தொடங்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் மகனுக்கு MBA படிப்பதற்கான வாசல்களைத் தேவன் திறந்து தரவும், இப்பணித்தள ஊழியரின் மனைவிக்கு கண்களில் நீர் வடிந்துகொண்டு வருகிறதைக் கர்த்தர் குணமாக்கவும், மற்றும் இப்பணித்தளத்தில் நடைபெற்றுவரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 20 நாக்வா

மாத்து, சுருஷ், கிசுன்பூர், டுங்கரி, கோல்ஹாடிஹ், சரேத் சங்கரி, ஜலேத் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சகோதரி ரீனா ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். கோர்ச்சா, சஞ்சய்புய்யா, ராணிதேவி ஆகியோர் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசதில் வளரவும், தீபக்குமாருக்கு சுவாசிப்பதில் உள்ள பிரச்னைகள் குணமாகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளுக்காகவும் அவர்களுடைய சரீர ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 21 ஜூரியா

26 முதல் 28 வரை ஜூரியாவில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 65 பேர் கலந்துகொண்டு ஊழியங்களுக்காகவும் தேசத்திற்காகவும் ஊக்கமாக ஒருமனதுடன் ஜெபித்தனர். புதிதாக 142 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபையைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் விரைவில் கட்டப்படவும், இப்பணித்தள ஊழியரின் 3 பிள்ளைகளின் படிப்பு மற்றும் ஆவிக்குரிய வாழ்விற்காகவும், அவருடைய குடும்பத்தாரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 22 ஹல்திகோச்சா

ஜோகன் டோப்போ, இருஷ் கஜுர், எலிசிபா, ராஜு, அனில் லின்டா, சியோன் எக்கா, நீலிமா, பிரதிமா ஆகியோருக்கு தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. 150 சகோதர சகோதரிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காகவும், 3 பேர் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்ததற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள்! சபை கட்டுவதற்கு தேவையான நிலம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் ஊழியத்திற்காகவும், தேவசித்தம் அவர்களுடைய வாழ்வில் நிறைவேறவும் ஜெபியுங்கள்.

மே 23 பன்ஸரி - சென்ஹா

லாச்சோ கச்சப் வீட்டில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்தில் 16 பேர் கலந்துகொண்டு பாடி ஆராதித்து தேவனை மகிமைப்படுத்தினர். 57 பேருக்கு புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது, தேவனுக்கு மகிமையுண்டாவதாக! கிராம மக்கள் மத்தியில் காணப்படும் போதைப் பழக்கங்கள் மாறவும், இப்பணித்தள ஊழியரின் குடும்பம், ஊழியம் மற்றும் எதிர்காலத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், இப்பணித்தளத்தில் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும், விசுவாசிகளின் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

மே 24 குது

சிராயியாடாட், பெலாதாரி, கெங்வாஹி ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் கொடுக்கப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. விஷ்ராம்முன்டா, கர்மாஉராவ், திலேஷ்வர் ஆகியோர் ஜெபத்தின் பலனால் அசுத்த ஆவியின் கட்டிலிருந்து விடுதலை பெற்றனர்; கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! விசுவாசிகள் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் விடுதலையோடு இருக்கவும், இப்பணித்தள ஊழியரது பிள்ளைகளின் படிப்பிற்காகவும், அவர்கள் அனைவரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், இப்பணித்தளத்தில் நடைபெற்றுவரும் அனுதின ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 25 பாலி

கைப்பிரதிகள் வாயிலாக புதிதாக 22 பேருக்கு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. புத்சர்பகத் என்ற சகோதரனுக்கு சுவிசேஷம் அறிவித்து, அவரது நீண்ட நாள் கால்வலிக்காக ஜெபித்தபோது, கர்த்தர் அற்புதமாக சுகம் கொடுத்தார்; தேவனுக்கே மகிமை! சபை ஆராதனையில் புதிதாக மக்கள் கலந்துகொள்ளவும், விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஸ்திரப்படவும், பணித்தளத்தில் காணப்படும் எதிர்ப்புகள் நீங்கவும், கிராமங்களில் காணப்படும் மூடப்பழக்க வழக்கங்கள் மாறவும், இப்பணித்தள ஊழியருக்காகவும், அவருடைய சரீர ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 26 பாலுமாத்

இப்பணித்தள ஞாயிறு ஆராதனையில் 60 பேர் கலந்துகொள்ளுகின்றனர். 47 பேர் திருவிருந்தில் பங்குபெற்றனர். சந்த்வா பணித்தளத்தில் சபைக் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. முர்பா கிராமத்தைச் சேர்ந்த குடியாதேவி அசுத்த ஆவியின் கட்டிலிருந்து ஜெபத்தினால் விடுதலை பெற்றதற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். இப்பணித்தள விசுவாசிகள் வசனத்தில் வளரவும், இப்பணித்தள ஊழியரின் 3 பிள்ளைகளுக்காகவும், அனைவரின் சரீர சுகத்திற்காகவும், இப்பணித்தளத்தில் செய்யப்பட்டுவரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 27 ம்குளுஸ்கிகஞ்ச்

நவாடிஹ், ஹெஸ்லாங், கோன்கா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. விசுவாசிகளின் வீடுகள் சந்திக்கப்பட்டது. சத்துக் குறைவினால் எழும்பி நிற்கக்கூட முடியாமல் இருந்த ஹிருத்திக் என்ற தம்பி சபையாரின் தொடர் ஜெபத்தினால் தற்போது தானாகவே எழுந்து நிற்கிறான்; தேவனுக்கு மகிமை உண்டாவதாக! பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு வலது கையும் காலும் செயலிழந்த நிலையில் உள்ள சகோதரி லூசிக்கு விரைவில் சுகம் கிடைக்கும்படியாகவும், இப்பணித்தள ஊழியரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் அவரது பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 28 பெத்லா

சைதுப், கல்யாரி, பதயானியா, பர்வாடிஹ், சிப்தோகர், கேட், குட்மு ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தொடர் ஜெபத்தினால் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்ட பிரான்ஸ் என்ற சகோதரனுக்காகக் கர்த்தரை துதிக்கிறோம்! இப்பணித்தளத்தில் உள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் இன்னும் வளரவும், கிராமங்களில் குடிப்பழக்கத்தில் உள்ள மக்கள் சீக்கிரத்தில் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தங்கள் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், இப்பணித்தள ஊழியக்காரரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் மற்றும் ஊழியரின் குடும்பத்தினர் யாவருக்காகவும் ஜெபியுங்கள்.

மே 29 பன்ஸாரி

பன்சரி, கோபர்சீலா, கொரியாடோலி, நவாடிபரா, கும்பாடோலி, கலியாபட், பக்சிடெப்பா, சட்டர்பகிச்சா ஆகிய கிராமங்களில் வீடுசந்திப்பு ஊழியம் செய்யப்பட்டது. ஜோயல், ஈசாக்கு மன்னு ஆகிய வாலிபப் பிள்ளைகள் சபை ஆராதனையில் தொடர்ந்து கலந்துகொள்ளுகின்றனர்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! ஜெய்மஸிகுஜுர் — க்கு காணப்படும் சுவாசப்பிரச்சனை விரைவில் குணமாகவும், சரோஜ் சகோதரனுக்கு தொடைப் பகுதியில் இருக்கும் பிரச்சனை விரைவில் மாறவும், இப்பணித்தள ஊழியரின் சரீர சுகத்திற்காகவும், பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மே 30 டன்டுவா

கோம்அடா கிராமத்தில் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் வாயிலாக 10 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மன்ஹே கிராமத்தைச் சேர்ந்த கங்கனிஉராவ் என்ற சகோதரன் 20 நாட்களாக இருந்த வயிற்றுவலியிலிருந்து ஜெபத்தின் வாயிலாக அற்புத சுகம் பெற்றார்; கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக! புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், இப்பணித்தள ஊழியரின் தகப்பனாராகிய ராம்பதி உராவ் இரட்சிக்கப்படவும், பணித்தள ஊழியரின் ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் அவருடைய பிள்ளைகளுக்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மே 31 மஹுவாதார்

சபையில் நடைபெற்ற 3 நாட்கள் உபவாச ஜெபத்தில், முதல் 2 நாட்கள் 40 பேரும், 3 — வது நாளில் 65 பேரும் கலந்துகொண்டனர். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஜுபல்டோப்போ, கொர்நேலியுஸ் ஆகியோர் சுகம் பெற்று வருகின்றனர்; கர்த்தருக்கு துதியுண்டாவதாக! போகட்டா சபையில் ஆவியானவரின் அசைவாடுதல் உண்டாகவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் சுகம் மற்றும் ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும், ஊழியரின் ஆரோக்கியம் மற்றும் ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

GEMS Media
வெளியீடுகள்

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : 9344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : 9942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: 9486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : 9443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890, 9944755640
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : 9788689771, 9486357950
Nazareth	No. 23, King Edward street, Nazareth - 628617, Ph. : 9442094110
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629001 Cell : 9894965520
Salem	1/40, Mugil Nagar 4th Cross, Indian Bank Colony, Narasothipatty, Salem - 636004 Cell: 9442337027
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : 9843088840
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : 9442210629
Tuticorin	39, Innaciyarpuram, 2 nd Street, Tuticorin - 628002 Cell : 9442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : 9952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : 9444763141
Madurai	No. 3/480-1, Vivekanandar Street, Surveyor Colony, Madurai - 625007 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor Street, Kajah Nagar - 620020 Cell : 9443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: 9443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden,
Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: 9448517025
Mumbai	Gala B-47, 2nd Floor, Sharad Industrial Estate, Lake Road, Near Bhandup Police Station, Mumbai - 400 078 Cell : 9322730294, 02225949999
Pondicherry	No. 22, 2nd Floor, 2nd cross, Perumal Raja Garden, Reddiyar Palayam, (opp. SBI Bank), Pondicherry - 605010 Cell : 8521577762
Kerala	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : 9486357950

GEMS National Action Center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

நேபாள் பணித்தள கன்வென்ஷன்

கூட்டங்கள்

நேபாள் தேசத்தின் கர்மச்சுழி பணித்தளத்திலுள்ள ஜெம்ஸ் ஆலயத்தில் நடைபெற்ற ஒருநாள் கன்வென்ஷன் கூட்டத்தில் சுமார் 100 விசுவாசிகள் பங்கேற்றனர். சகோ. டேனியல் ஜெபக்குமார் ஆராதனையில் ஜனங்களை வழிநடத்த, சகோ. ஜான் சாமுவேல் மற்றும் போதகர் ராஜு லாமா ஆகியோர் கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டனர்.

GEMS MEDIA

Transforming Nations through Media Ministry

Media Ministries

www.gemsmedia.in



(Youtube channel)

GEMS Media Online

www.youtube.com/channel/UCIrr6S1t_fAlfTILnVDyNnA

Apps

www.store.gemsmedia.in

You Can Buy Books and DVDs Online

GEMS Magazines

Prabhat - Kids (Hindi)
Yudha Dvani - Kannada
GEMS Satham - Tamil
GEMS Sabdam - Telugu
Aathmadarshan - Hindi
The CALL - English

Regd. office :

GEMS Educational Media Services

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-